Eபத்திரிகா மாத இதழ்

# “தர்மம் சர,,

## “धर्मं चर,,

செப்டம்பர் (15.09.2025) , பிரதி-13 -கும்பகோணம்

Mantra Peeteswari Veda Patasala Kumbakonam

>>> ப்ரஹ்மஶ்ரீ குருராம கனபாடிகள் பேசுகிறார் >>> நாமகரணச் சிறப்பு



**नामाखिलस्य व्यवहारहेतुः शुभावहं कर्मसु भाग्यहेतुः ।**
**नाम्नैव कीर्तिं लभते मनुष्यस्ततः प्रशस्तं खलु नामकर्म ॥**

பெயர்தான் வ்யவஹாரத்திற்கும் அதாவது அழைப்பதற்கும் சுபத்திற்கும் பாக்யத்திற்கும் வழிவகுக்கும் முக்கிய அம்சமாகும்.

**द्व्यक्षरं चतुरक्षरं वा घोषवदाद्यन्तरन्तस्थं**
**दीर्घाभिनिष्ठानं कृतं कुर्यान्न तद्धितम् ॥**

**ஆண் குழந்தைக்குப் பெயரிடுதல்**



குழந்தைக்கு பத்தாம் நாளில் தந்தையானவர் பெயரிட வேண்டும்.ரிஷிகளின் பெயர்களையும் தேவதைகளின் பெயர்களையும் குலத்தின் முன்னோர்களின் பெயரையும் வைப்பது நமது வழக்கமாக இருக்கின்றது

**स्त्रीणां सुखोद्यं अक्रूरं विस्पष्टार्थं मनोहरम् ।**
**मङ्गल्यं दीर्घवर्णान्तं आशीर्वादाभिधानवत् ॥**

**ஒரு பெண்ணுக்கு பெயரிடுதல்**

ஒரு பெண்ணின் பெயரில் ஒற்றைப்படை எண்ணிக்கையிலான எழுத்துக்கள் இருக்க வேண்டும்.அது आ (ஆகாரத்தில் ) மற்றும் इ (இகாரத்தில் ) முடிவடைய வேண்டும். தேவதைகளின் சம்பந்தமுள்ள மங்களமான சொற்கள் கொண்ட பெயரும், ஆசியை சொல்லும்விதமாகவும் இருக்க வேண்டும்

இன்னும் அறிவோம்

## >>> பூதக் கண்ணாடி

>>> ஸ்ரீமதி ஸௌம்யா குருராமன்



புராணம் என்பது வேதத்துக்கு பூதக் கண்ணாடி. சின்னஞ்சிறியதாக இருப்பதை பூதக்கண்ணாடி நன்றாகப் பெரிசுப் பண்ணி காட்டுகிறதல்லவா? இம்மாதிரி வேதத்தில் சுருக்கமாக, சின்ன சின்னதாகப் போட்டிருக்கிற தர்மவிதிகளை கதைகள் மூலம் பெரிசு பண்ணிக் காட்டுவதுதான் புராணம். ஒன்றைச் சுருக்கமாகச் சொன்னால் அது மனஸில் ஆழப்பதியாமல் போய்விடலாம். அதையே சுவாரஸ்யமான கதையாக விஸ்தாரம் பண்ணிச் சொன்னால் நன்றாக மனஸில் பதியும்.




ஸத்யம் வத' (உண்மையே பேசு) என்று மட்டும் வேதம் சொல்கிறது. அப்படிப் பேசுவதால் எத்தனை பெருமை ஏற்படுகிறது என்பதை ஹரிச்சந்திரன் கதை பல அத்யாயங்களில் விஸ்தாரமாகச் சொல்கிறது.தர்மம் சர' (அறத்தைப் பின்பற்று) என்று இரண்டு வார்த்தையில் வேதம்'சொன்னதை நீள நெடுக மஹாபாரதத்தில் தர்ம புத்திரரின் கதையாகச் சொல்லியிருக்கிறது.

இவர்கள் எல்லாருக்கும் சோதனைகளும் கஷ்டங்களும் நிறைய வந்திருக்கின்றன. அநேக தப்புக்களைச் செய்கிற நம்மைவிட இந்த உத்தமமான புராண பாத்திரங்கள்தான் ஜாஸ்தி கஷ்டப்பட்டிருக்கிறார்கள். ரொம்பவும் பயங்கரமான சோதனைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆனாலும் இவர்களுடைய சரித்திரத்தைப் படிக்கும்போது, "தர்மங்களை அநுஸரிப்பதனால் கஷ்டந்தானே ஏற்படுகிறது? அதனால் அநுஸரிக்க வேண்டாமே!" என்று தோன்றுவதேயில்லை. அத்தனை கஷ்டத்திலும், சோதனையிலும் விட்டுக் கொடுக்காமல் அவர்கள் பாறாங்கல் மாதிரி தர்மத்திலேயே நிற்பதால் பெற்றிருந்த மனத் தெளிவுதான் நம் மனஸில் பதிகிறது. அதோடுகூட அந்த உத்தமர்கள் படும் கஷ்டங்களைக் கேட்கும்பொழுது நம் உள்ளம் உருகுவதாலேயே நம்முடைய மனதில் உள்ள அழுக்குகளையும் அலம்பிவிட்டாற்போல் இருக்கிறது. முடிவிலே அவர்களுக்கு ஏற்படுகிற பெரிய வெற்றியும் கீர்த்தியும் நமக்கு அந்த தர்மங்களில் கெட்டியான பிடிமானத்தை உண்டாக்கித் தருகின்றன.

இன்னும் அறிவோம்

---



## "அடிப்படை தர்மங்கள்"

வித்வான்
விரூபாக்ஷ சர்மா

பவித்ர லக்ஷணம்

स्मृतिभास्करे – चतुरङ्गुलमग्रं च ग्रन्थिरेकाङ्गुला तथा ।
वलयं द्व्यङ्गुलं चैव पवित्रस्य तु लक्षणम् इति ।

ஸ்ம்ருதிபாஸ்கரத்தில்:- நுனி நாலு அங்குலம் , முடிச்சு ஒரு அங்குலம், வளையம் இரண்டு அங்குலமும் இருக்க வேண்டும் . இது பவித்ரத்தின் லக்ஷணமாகும்.



# சந்தேகங்களும் சமாதானங்களும்



**ஒரு காலம் ஔபாஸனம் விட்டுப் போனால் அதை எப்பொழுது எப்படிச் செய்யவேண்டும்?**

**ஸமாதானம்:-**

அடுத்தகாலம் ஹோமம் செய்யும்போது முதலில் விட்டுப்போன ஹோமத்தைச் செய்து, பிறகு அக்காலத்திய ஹோமத்தைச் செய்யவேண்டும். இவ்விதம் செய்யும் பர்யந்தம் ஆஹாரம் செய்யக்கூடாது.

---

வேங்கடேஷ்- பூர்வமீமாம்ஸா சிரோமணி

# யோகவாசிஷ்ட கதைகள்



## உத்பத்தி ப்ரகரணத்தில் இடம் பெற்ற ஒரு கதை

கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன், கோடிகள் என்று சொல்வது ஒரு கணக்குக்குத்தான்- காலவெளியின் தோற்றுவாயில் என்று கூட சொல்லலாம்,

அப்படிப்பட்ட கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் ஒரு குக்கிராமத்தில், ப்ராம்ஹண குலத்தில், ஆகாசஜன் என்று ஒருவன் பிறந்தான். அவனது தந்தையின் பெயர் ஆகாசன் என்பதனால்தான் அவன் ஆகாசஜன் என்று பெயரிட்டழைக்கப்படுகிறானேயன்றி, அவனுக்கு இப்பெயரைச் சூட்டுவதற்கோ, வேறு பெயர் கொண்டு அவனை அழைக்காமலிருப்பதற்கோ, காரணங்கள் எதுவும் விசேஷமானதாக இல்லை.

அவன் அந்தக் குக்கிராமத்தில் அந்தக் குடும்பத்தில் பிறந்தததற்கும் அதுபோலவே விசேஷமானக் காரணங்கள் எதுவும் கிடையாது. உண்மையை அப்பட்டமாக சொல்வதென்றால், அவன் அந்தக் கிராமத்தில், அந்தக் குடும்பத்தில் பிறந்தவனல்லன். அவன் தோன்றியது ஞானாகாசத்தில்.

தொடரும்

வேதப்பயிர் செய்து”
“வேதவாழ்வினைக் கடைப்பிடித்தோம் “
“வேதங்கள் பாடுவாள் காணீர்”

நமது சந்ததியினர் வேதங்களைக் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித்தருவோம்







## நமது பாடசாலையில் விநாயக சதுர்த்தி உத்சவம்/ கணபதி ஹோமமும் விமரிசையாக நடைபெற்றது



